Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

## حلم ريما

أَحلم... أن أصبح عصفورة    كي أَعبر مرجا ...وبحورا
وأطير...وأُحلِّق...في الأجواء    أُسابق غيما...ونسورا
وأُزقزق فوق الأشجار    كي ترقصَ طربا وسرورا
وأُغنِّي للزهر أناشيدي    كي تنشر فرحا...وعطورا
حدَّثتُ ال"ماما" عن حُلْمي    ضحكتْ..قالت:يا مغرورة
فأنا ريما يا أصحابي    حُلْمي أن أصبح مشهورة

أَحْلُمُ (حَلَمَ) கனவு காண்கிறேன்    عصفورة சிட்டுக் குருவி
أَعْبُرُ (عَبَرَ) கடந்து செல்வேன்    مَرَجٌ புல்வெளி    أُحَلِّق ( حلَّق ) வட்டமிடுவேன்
جوٌّ (ج) أجواء வானவெளி    غَيمٌ மேகம்    أُسابقُ (سابق) போட்டி போடுவேன்
أُزَقْزِقُ ( زَقْزَقَ ) கீச்சிடுவேன்    ترقُصُ ( رَقَصَ ) ஆடி அசைகிறது    طربا மகிழ்ச்சி
أُغَنِّي ( غَنَّى ) பாடுகிறேன்    عطورا வாசனை    مشهورة பிரபல்யம்

**இலக்கணப் பகுதி:**

## المصدر الميمي

"**المصدر**" என்பது ஒரு செயலின் நிகழ்வைக் காட்டும் 'பெயர்ச் சொல்' ஆகும். இது தமிழ் இலக்கணத்தில் 'வினையடி' எனப்படும். இது ஐந்து வகைப்படும். அதன் அமைப்புகள் பின்வருமாறு காணப்படும்.

1. மூன்று எழுத்துச் சொற்களாயின் அது "مَفْعَلٌ" என்ற அமைப்பை பெற்று வரும்

**உதாரணங்கள் :**

نَصَرَ    يَنْصُرُ    مَنْصَرٌ    **உதவி செய்தல்**

வெட்டுதல்		مَقْطَعٌ	يَقْطَعُ	قَطَعَ

வேலை செய்தல்		مَعَمَلٌ	يَعْمَلُ	عَمِلَ

2. ஒரு சொல்லில் و முதல் எழுத்தாக வந்து அச்சொல் நிகழ் காலத்துக்கு மாற்றப்படும் போது و நீக்கப்படுமாயின் அது "مَفْعِلٌ" என்ற அமைப்பில் வரும்.

**உதாரணங்கள் :**

நிகழ்தல்	مَوْقِعٌ	يَقَعُ	وَقَعَ

வைத்தல்	مَوْضِعٌ	يَضَعُ	وَضَعَ

தரித்தல்	مَوْقِفٌ	يَقِفُ	وَقَفَ

3. ஒரு சொல்லின் இரண்டாம் மூன்றாம் எழுத்துக்கள் ஒரே எழுத்துக்களாக அதாவது ஷத்து ـّـ பெற்று வருமாயின் அச்சொல்லின் المصدر الميمي மேற்குறிப்பிட்ட இரண்டு அமைப்பிலும் வரும்.

**உதாரணங்கள் :**

நீட்டுதல்	مَمَدٌّ / مَمِدٌّ	يَمُدُّ	مَدَّ

சந்தேகப்படல்	مَشَكٌّ / مَشِكٌّ	يَشُكُّ	شَكَّ

குறைதல்	مَقَلٌّ / مَقِلٌّ	يَقِلُّ	قَلَّ

4. الفعل الثلاثي ஆன இறந்த கால சொல்லின் இரண்டாவது எழுத்து ي என்ற حرف علة ஆக இருப்பின் அதன் المصدر الميمي கீழ்க்காணுமாறு அமையும்.

**உதாரணங்கள் :**

வடிதல்	مَسَالٌ	يَسِيْلُ	سَالَ

சாய்தல்	مَمَالٌ	يَمِيْلُ	مَالَ

வாழ்தல்	مَعَاشٌ	يَعِيْشُ	عَاشَ

இருந்த போதிலும் இச்சொற்களில் م அடுத்து வரும் எழுத்திற்கு ـِ செய்து அதற்கு அடுத்த எழுத்தை ي ஆக்கி அரபிகள் பயன்படுத்துவதுண்டு.

مَسِيْلٌ – مَمِيْلاً – مَسِيْرُ

حروف العلة களுடன் வரும் ஏனைய சொற்களும் இவ்வாறே வரும்.

| | |
|---|---|
| **பெற்றுக் கொள்ளல்** | نَالَ يَنَالُ مَنَالٌ |
| **எழுந்து நிற்றல்** | قَامَ يَقُوْمُ مَقَامٌ |
| **நடத்தல்** | مَشَى يَمْشِيْ مَمْشَى |

جَاءَ எனும் சொல்லை மட்டும் தவிர. جَاءَ எனும் சொல் கீழ்க்காணும் அமைப்பில் மட்டுமே வரும்.

| | |
|---|---|
| **வருதல்** | جَاءَ يَجِيْئُ مَجِيْئٌ |

5. الفعل الثلاثي அல்லாத சொற்கள்: அவற்றின் நிகழகாலத்தைக் குறிக்கும் எழுத்தை அகற்றி அவ்விடத்துக்கு ரப்ஃ .( ـُـ ) செய்யப்பட்ட مُ ஐக் கொண்டு வந்து இறுதி எழுத்துக்கு முந்திய எழுத்துக்கு ـَـ செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| **உதவி செய்தல்** | نَاصَرَ يُنَاصِرُ مُنَاصَرٌ |
| **உடைதல்** | إِنْكَسَرَ يَنْكَسِرُ مُنْكَسَرٌ |
| **பாவமன்னிப்பு** | إِسْتَغْفَرَ يَسْتَغْفِرُ مُسْتَغْفَرٌ |
| **நிலையின்றி தடுமாறல்** | تَذَبْذَبَ يَتَذَبْذَبُ مُتَذَبْذَبٌ |